# செந்தமிழ்

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.


தொகுதி—௫௩ | துன்முகி—மாசி | Vol. 53
பகுதி—௨ | February-March—1957 | No. 2






## உள்ளுறை.


**தமிழ்ச் செல்வம்:** 33
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை.

**தமிழர் திருமணம்:** 49
டாக்டர். மா. இராசமாணிக்கனார்.

**சிலப்பதிகாரம்—கானல்வரி:** 53
பண்டித-வித்துவான் தி. சங்குப்புலவர்.

**நாட்டுவளம்:** 57
டாக்டர். மா. இராசமாணிக்கனார்.

**தமிழ்ப்பெரியார் கதிரைவேற்பிள்ளை:** 60
மாலங்தெணிமணி.

**தமிழில் கலைச்சொல்லாக்கத்திற்கு எழுத்துப் பெயர்ப்புச் சிறந்ததா? மொழி பெயர்ப்புச் சிறந்ததா?** 61
எஸ். அல்லாபிச்சை.


## "செந்தமிழ்" ஆசிரியர் குழு:


நிர்வாக ஆசிரியர் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (பார்-அட்-லா)

1. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், **ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை** தியாகராசர் கல்லூரி, மதுரை. (தலைவர்)
2. திரு. பேராசிரியர், செந்நாப்புலவர் **ஆ. கார்மேகக்கோனார்**, மதுரை
3. **டாக்டர். மா. இராசமாணிக்கனார்** M. A. M. O. L. L. T. Ph. D. தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை
4. திரு. பேராசிரியர், **பி. ஜோதிமுத்து** M. A., B. D. தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.
5. திரு. நா. **அப்பனையங்கார்**, ஆசிரியர், தமிழ்ச் சங்கம், மதுரை.
6. திரு. **முகமது சுல்தான் அவர்கள்**, M. A. B. L. வழக்குரைஞர்—மதுரை.
7. திரு. **வி சண்முகசுந்தரம் அவர்கள்**, M. A. B. L. செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், அரசாங்க வழக்குரைஞர், மதுரை,
8. திரு. **சி. பழநியப்பன் அவர்கள்**, தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

உ

கடவுள் துணை

# செந்தமிழ்

தொகுதி-ருங.] துன்முகி௵—மாசி௴ [பகுதி-உ.

Vol. 53. February-March—1957. No. 2.

## தமிழ்ச் செல்வம்

சித்தாந்த கலாநிதி பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை.

தமிழ் இலக்கிய வரலாறு காண்பவர் அதனை வரலாற்று நெறிபற்றியும் இலக்கியநெறி பற்றியும் ஆராய்வதுண்டு. இவற்றுள் வரலாறு காண்போர் தமிழ் மூவேந்தர் காலம், களப்பிரர்காலம், பல்லவர்காலம், பாண்டிய சோழர் காலம், விசயநகர வேந்தர் காலம், முகமதிய மேனாட்டவர் காலம் எனப் பல காலவியல் கண்டு, இலக்கியங்களை அவ்வக் காலங்களில் வகுத்து ஆராய்வர். இலக்கிய நெறியே நோக்குவோர், சங்கத் தொகை நூற்காலம், காப்பியக் காலம், புராண காலம், பிரபந்த காலம் என வகுத்துக் கொள்வர். காப்பியக் காலத்துள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, சூளாமணி, நீலகேசி, உதயணன் பெருங்கதை, கம்பராமாயணம், பாரதம் முதலிய வற்றை தொகுப்பர். புராணம் என்றது கந்தபுராணம் பாகவத புராண திருவிளையாடற் புராணம் முதலாகத் தல புராணங்கள் ஈறுக பல்வகைப் புராணங்களைக் குறிக்கும். பிரபந்தங்கள் என்பன குப குருபரர், தாயுமானர், சிவப்பிரகாசர், சிவஞான முனிவர் முதலி சான்றோர் பாடிய சிறு நூல்களும் வேறு பலர் எழுதியுள்ள பரணி, தாதி, உலா, கோவை, மடல் முதலியனவாம். இவற்றின் வேறு

சாத்திர நூல்கள், தோத்திர நூல்கள் பல உள்ளன. அவற்றுள் மெய கண்ட நூல்களும் பிறவும் சாத்திர வகையினும் சைவத் திருமுறை பன்னிரண்டும் நாலாயிரப் பிரபந்தமும் தோத்திர வகையினும் அடங் கும்.

இவ்வாறு பலவகையாகத் தமிழ் இலக்கிய வரலாறு ஆராயப்படுமா யினும், காலத்தாலும் வரலாற்று நெறியாலும் பிறவகையாலும் காண் பார்க்கு, சங்கத்தொகை நூற்காலம் மிகத் தொன்மை வாய்ந்தது என் பது ஒருதலை; இம் முடிபின்கண் எவர்க்கும் கருத்து வேறுபாடு இருப்பதாகத் தோன்றவில்லை. எவ்வகை ஆராய்ச்சியாளரும் சங்ககால இலக்கியங்களை மேற்கொள்வதில் மிக்க ஆர்வமே அடைகின்றனர். இக் காலம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னதென்பது எத்திறத்தா ரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இலக்கிய நெறியில் ஆராய்வார்க்கு இக்கால ஆராய்ச்சியாளர் சிலர் சில தடைகளை நிகழ்த்துகின்றனர். ஆராய்ச்சி யுண்மைகள், விஞ்ஞான நெறியுண்மை, தத்துவநெறி யுண்மை, வரலாற்றுண்மை, புலவர் வா யுண்மை என நான்காக வகுத்து இவற்றிற்கு மதிப்பும் இம் முறையே தந்தொழுகுவர். எல்லாவற்றிற்கும் இறுதியாகப் புலவர் வாயுண்மை களை நிறுத்தியிருப்பது குறிக்கத்தக்கதாகும். இதற்குச் சீர்த்த காரண மாக ஒன்று கூறுவர்: “புலவர்கள் தாம் காணும் பொருளை உள்ளவாறு கூறுது சிறிது உயர்த்தியே கூறுவர்; அக்கூற்றில் உண்மைக்குப் புறம் பானது சிறிது கலந்தே யிருக்கும். அதனால் அதனை உள்ளதன் உண்மை கூறியதாகவே கோடற்கில்லை” என்பர். சோபனோர் முதலிய மேனாட்டறிஞர் “உண்மையை உள்ளவாறு கூறுதல் சுவையுறாது” என்று கூறி, “மக்கள் இனிது உயிர் வாழ்தற்கு உயிர்க் காற்று இன்றி யமையாது; அதனைச் செயற்கை முறையில் மிகத் தூய்மையாக வடித் தெடுத்து ஒருவன் உட்கொண்டால் அவன் உடனே நுரையீரல் வெந்து இறந்து படுவன்; உயிர் வாழ்வு வேண்டின் வேறு காற்று வகை

கலந்த உயிர்க் காற்றே வேண்டப் படும்; அதுபோல அறிவு வாழ்வு வேண்டின் கற்பனை கலந்த உண்மையே வேண்டுவது" என்பர். வாய்மையின் மாண்பை வற்புறுத்தப் புகுந்த திருவள்ளுவர், "பொய்ம் மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்" என்றதும் இக் கருத்தையே குறிப்பது காணலாம்.

புலவர் வாயுண்மை யுரைகளில் சிலபொய்யும் விரவியிருக்குமெனத் தாம் கொண்ட முடிவுகளை வலியுறுத்தற்கு இவ் வாராய்ச்சியாளர் சீவக சிந்தாமணி இராமாயணம் முதலியஇலக்கியங்களிலிருந்து சிலபுனைந்து ரைகளைக்காட்டுகின்றனர். "நம் மோரன்னோர் மாட்டும் இன்ன பொய் யொடு மிடைந்தவை தோன்றின், மெய் யாண்டுளதோ இவ் வுலகத் தானே" (அகம். 286) என்றும்,"செய்யா கூறிக் கிளத்தல் எய்யாதா கின்று எம் சிறு செந்நாவே" (புறம். 148) என்றும் வரும் சங்க நூல் கூற்றுக்கள் புலவரது வாய்மையை உணர்த்துகின்றன. "மாங்குடி மரு தன் தலைவனாக, உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பின் புலவர்" (புறம். 22) என்றும், "உலகுடன் திரிதரும் பலர் புகழ் நல்லிசை, வாய் மொழிக்கபிலன்" (அகம். 78) என்றும் வருவனவும் பிறவும் அப் புல வர் பால் மக்கள் கொண்டிருந்த நன்மதிப்புத் தெற்றெனக் விளக்கும். இவ் வாராய்ச்சியாளர்கள் உண்மை யறிவோடு காண்பரேல், இச் சான் றோர் வாய் வருவனவற்றைப் பொய்யொடு மிடைந்தவை யெனத் தம் கருத்தில் நினைத்தற்கும் கூசித் தம்மையே அருவருத்துக் கொள்வர்.

இதனாற் போந்தது என்னை யெனின், பிறநாட்டு வரலாறு, அதன் தொன்மை, மக்களின் வாழ்க்கை முறை முதலியவற்றை ஆராய்தற்கு வேண்டுமாயின் இவ் வாராய்ச்சியாளர் முறை பொருந்துமே யன்றிப் பண்டைத் தமிழ் மக்கட்குரிய சங்க இலக்கியப் புலவர் வாய்மொழி ஆராய்ச்சிக்குச் சிறிதும் பொருந்தாது என்பது வற்புறுத்தியவாறும்.

சங்ககாலத்து இலக்கியம் என்று எடுத்துக் கொள்வேமாயினுட் சங்க காலம் சங்க நூற் புலவர் இருந்த காலத்தையும் அவர்கட்

முன்பிருந்த தொல்காப்பியர் காலத்தையும் உளப்படுத்தி நிற்கும். சங்கத் தொகை நூல்களில் உள்ள பாட்டுக்களில் தொல்காப்பியத்துக்கு முற்பட்டனவும் சங்க காலத்துக்குப் பிற்பட்டனவும் இருக்கலாம் எனக் கருதுவோரு முளராதலால், எல்லாம் அகப்படச் சங்க இலக்கியம் என அவற்றைக் கொண்டொழியலாம். தொல்காப்பியர் தாமும் தம் காலத்திலும் தமக்கு முன்னோர் காலத்திலும் நிலவிய "வழக்கும் செய்யுளும்" அடிப்படையாகக்கொண்டார்; அவர்காட்டும் இலக்கணங் கட்குச் சங்க இலக்கியங்களே போதிய சான்றுகளை நல்குகின்றன.

சங்ககாலத்தே நம் தமிழகம் நிலத் தகுதிபற்றிக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பகுக்கப் பெற்றிருந்தது. தொல்காப்பியத்துள் பாலைக்கு நிலம் கூறப்படவில்லை. எனினும் சங்கநூல் களுக்குப் பிற்போந்த சிலப்பதிகாரம், சங்கநூல் காட்டும் நிலக்கூறு களைத் துணையாகக்கொண்டு முறைமையில் திரிந்து நல்லியல்பு இழந்து நிற்கும் குறிஞ்சியும் முல்லையுமாகிய நிலப்பகுதியைப் பாலைக்கு நில மாகக் கூறிற்று. இதனால் சங்ககாலத் தமிழகத்தில் ஐவகை நிலப் பாகுபாடும் இருந்தமை புலனும். இவ்வைவகை நிலத்தும் வாழ்ந்த மக்கள் தமிழரே யெனினும், நிலவியல்புபற்றிக் குறிஞ்சியோர் குன்றவர் குறவர் எனவும், முல்லையோர் ஆயர் இடையர் எனவும், பாலையோர் மறவர் எயினர் எனவும், மருதநிலத்தோர் உழவர் வேளாளரெனவும், நெய்தலார் பரதவர் நுளையர் எனவும் கூறப்பட்டனர்.

"ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்,
ஆவயின் வருஉம் கிழவரும் உளரே"

என்று தொல்காப்பியம் கூறுகிறது. இவர்களைத் திணைநிலைமக்கள் என்பதும் வழக்கு.

இத் தமிழ்மக்களிடையே உயர்தொழிலும் சிறுதொழிலும் ஏவற் றொழிலும் அடிமைத் தொழிலும் எனத் தொழில் செய்வோர் பலர் உண்டு. தொழிற் சிறப்பால் இவர்கள்பால் வேற்றுமையுண்டே யன்றித்

பிறப்பு வகையில் வேறுபாடு கிடையாது. உயர் தொழில் வகையில் கற்பன கற்று அறங்கூறுதல், அரசுபுரிதல், வாணிகம், உழவு, நிரைமேய்த்தல், வேட்டையாடுதல், தேனீட்டல், மீன் பிடித்தல் முதலியன அடங்கும். உயர்தொழிற்குரிய வாய்ப்பின்மையால் அத் தொழில்கட்குரிய துணை செய்தலும், பிறர் ஏவின செய்தல், அடிமைத் தொழில் புரிதல் முதலியனவும் சிறு தொழில்களாகக் கருதப்பட்டன. வண்ணார், மயிர்வினைஞர் முதலியோர் சிறு தொழில் செய்வோராவர்.

பொருள் ஈட்டலும் அதுகொண்டு அறம் செய்தலும் இன்பம் நுகர்தலும் உயிர் வாழ்க்கையின் இன்றியமையாத கூறுகளாகும். அறமே பொருள் இன்பங்களைப் பெறுதற்கு நெறியாவது என்பர்; "சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும், அறத்து வழிப்படூஉம்" (புறம். 31) என்று சான்றோர் கூறுவதனால் இதனை அறியலாம். அறத்தில் வழுவாத வாழ்க்கையும் என்றும் பிறன் மனை சென்று இரவாத செல்வமும் அவர் வாழ்வில் முதலிடம் பெற்றன. மக்களுடைய வாழ்நாளின் சின்மையும் இளமையது அருமையும், தாளாண் பக்கமும், தகுதியது அமைதியும், இன்மையது இழிவும், உடைமையது உயர்ச்சியும் அன்பினது அகலமும் அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். ஈதலும் இசைபட வாழ்தலும் உடலோடுகூடி வாழும் உயிர்க்கு ஊதியமாக எண்ணப்பட்டன. ஈதல் குறித்தே யாவரும் பொருள் ஈட்டினர்; தொழில் செய்தனர். புகழ் பெறுவதையே இல்வாழ்வின் முடிவாக நினைந்து ஈகையை மேற்கொண்டனர். புகழின் அழியாமை கண்டு அது பெறுவது குறித்து மறம் பூண்டு அறப்போர் உடற்றினர். புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின் உலக முழுதும் தம் வயமாயினும் வேண்டார். இஃது ஆடவர் பெண்டிர் இருபாலர்க்கும் பொது நோக்கமாக நிலவிற்று. இரவலராயினும், புரவலராயினும், ஏவலராயினும், காவலராயினும், அடியவராயினும், யாவராயினும் அறமும் பொருளும் பெற்றுப் புகழும் இன்பமும் கொண்டு வாழ்வதே வையத்து வாழ்வாங்கு வாழும் மாண்புடை நெறி என்று ஆடவரே யன்றி மகளி

ரும் மதித் தொழுகினர். ஈகையும் புகழும் இசையும் கல்வியும் மகளிர்க்கும் பொது அறமாய் நிலவின. மறப்போர் புரிதல் ஆடவர்க்கே யுரிய தொழிலாயினும், மறவுணர்வு கொளுத்தி மறத்துறையில் ஆடவரை ஊக்குவதில் மகளிர் பேரீடுபாடு கொண்டு ஒழுகினர். மறப்போரில் நோயுற்ருேர், மகப்பெருதோர், பெண்டிர், இளையர், முதியோர் என்ற இவர்களைத் தாக்குதல் அறமன்று; இவர்கட்கு வேண்டும் ஏமம் தந்து பேணுதல் நட்டார் பகைவர் வென்ருேர் தோற்ருேர் யாவர்க்கும் கடன்.

அறங்கூறுவோரை அறவோர், அந்தணர், ஐயர் எனப்பாராட்டிக் கூறுவர். எவ்வுயிர்க்கும் அருள் செய்து ஒழுகுபவர் அந்தணர்; உலக வாழ்வில் பெறலாகும் இன்பங்களையும் துன்பங்களையும் ஒப்ப நோக்கி மனத்தே பற்றின்றி அறங்கூறும் சான்ருேரை அறவோர் என்பர். "அந்தணர் என்ப அறவோர் மற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்" என்று திருவள்ளுவர் கூறுவர். இது தமக்கு முன்பே வாழ்ந்த சான்ருேரிடையே நிலவிய உயரிய கொள்கை என்றதற்கே திருவள்ளுவர் என்ப எனச் சான்ருேர் கூற்ருக வுரைக்கின்ருர். ஊர் தோறும் இச் சான்ருேர் வாழ்தலால் மக்கள் வாழ்வில் அறமும் பொருளும் இன்பமும் அமைந்திருந்தன. "ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்ருேர் பலர் யான் வாழும் ஊரே" என ஊர்கள் சான்ருேர்களால் சிறப்புற்றிருந்தமை காணலாம். "ஆசறு காட்சி ஐயர்" எனவும், "ஐயர் யாத்தனர் கரணம் என்ப" எனவும் வருவன இந்த அறவோரைக் குறிப்பனவாம்.

தமிழ் மக்கள் பேசிய மொழி தமிழ் எனப்படும். தமிழ் இலக்கியங்கள் இயல் இசை கூத்து என மூன்று திறமாக விளங்கின. எண்ணும் எழுத்தும் இயல்வகையைச் சேர்ந்தவை. அறம் பொருள் இன்பம் என்ற பொருள்களை யன்றி மெய்யுணர்வுக்குரிய மெய்ந்நூலும் அரசியல் பொருளியல் அரணியல் படையியல் ஓவியம் சிற்பம் முதல்களவு நூல் கணநூல் ஈருகவுள்ள பலவேறு நூல்களும் இயற் பகுதி

யாகும். இயற் புலவருள் சமயக் கணக்கரும் அமையக் கணக்கரும் நாள் கோள் முதலியவற்றை ஆராய்ந்துரைக்கும் வானூற் புலவரும் கணியரும் மருத்துவரும் அடங்குவர். இசை வல்லுநர் பாணர் விறலியர் என்றும், கூத்து வல்லுநர் கூத்தர், பொருநர், கண்ணுளர் என்றும் கூறப்படுவர். இம் மக்கள், குன்றவர் முதலிய திணை நிலை மக்கள் போலாது, தமிழக மெங்கும் திரிந்து ஆங்காங்கு வாழ்ந்த செல்வர்கள் மன்னர் முதலியோருடைய அறச்செயல் கண்டு அவர்களின் குணஞ் செயல்களைப் புகழ்ந்து பாடிப் பரிசில்பெற்று வாழ்ந்தனர். அறப்புகழையும் மறப்புகழையும் அழகிய தமிழாற் பாடிச் செல்வர்களையும் வேந்தர்களையும் சிறப்பிக்கும் துறையில் இயற்புலவரும் ஈடுபட்டு அவர் தரும் பரிசிலைப் பெற்றனர். அதனைப் பெறுமிடத்தும் அவர்கள் தமது வரிசைக்கும் மானத்துக்கும் இழுக்கு வாராதபடி காத்தொழுகுவர். தம்மை இகழ்கின்றார் என்ற குறிப்புச் செல்வர்பால் தோன்றின், அவர் தரும் பரிசில் எத்துணைச் சிறந்ததாயினும் இப் புலவர் பெருமக்கள் ஏற்பதிலர். அதனால், செல்வர்கள், பாணர் முதலாகிய இரவலர் வரிசையில் இப் புலவர்களை வையாது தமக்கு ஒத்த நிலையினும் உயர் நிலையினும் வைத்துப் பேணினர். அவ் வுரிமை நினைந்து புலவர்களும் அச் செல்வர் வேந்தர்கள்பால் தவறு தோன்றின் அதனை நயமான சொற்களால் நீக்கி அவர்களையும் நன்னெறிப் படுத்துவதைத் தம் கடமையாகக் கொண்டனர். பேரரசர்கட்கிடையே தூது சென்று ஒற்றுமை செய்து போர்வினையால் உண்டாகும் உயிர்க்கேடு பொருட்கேடுகளை நிகழாவாறு தவிர்க்கும் உரவோராகலின், புலவர்களை நாடோடிகள் எனக் கருதுவது குற்றம். "இகல்மீக் கடவும் இருபெரு வேந்தர், வினையிடை நின்ற சான்றோர்" (குறிஞ்சிப். ) என்று போற்றுதல் காண்க. ஏனைத் திணைநிலை மக்களிடையே தோன்றினும் இவர்கட்கு "யாதும் ஊரே; யாவரும் கேளிர்." இவர்கட்குப் பகைப்புலம் நட்புப்புலம் என்ற வேறுபாடு கிடையாது. இவர்கள் அரசர் அவைக் களத்தும் புகுவர்; அடல் குறித்து மறவர் செய்யும் அமர்க்களத்தும் புகுவர்.

தமிழ்மக்கள் தம்மில் செயல் வகையால் பலவேறு பெயர்பூண்டு இருந்தனரேயன்றி மகட்கோடல் உணவுகோடல் முதலியவற்றில் யாதொருவேறுபாடும் கொண்டிலர். அறவோர்முதல் கூத்தர் பாணர் ஈறுக அனைவரும் ஒருங்கே இருந்து உணவு கொள்வர். இக்காலத்துச் சாதி வேறுபாடும் உண்டிவேறுபாடும் மணவேறுபாடுமாகிய இவற்றின் வேறுபாட்டுமுடைநாற்றம் அக்காலத்தே அவரிடையே தோன்றிய தில்லை. குறிஞ்சிநிலத்தவர் மருதநிலத்தவரோடும், முல்லைநிலத்தவர் குறிஞ்சி முல்லை முதலிய நிலத்தவரோடும் இவ்வாறே பிறர் பிறரோடும் கொள்வன கொடுப்பன செய்து இனிது வாழ்ந்தனர். யாவரும் ஊனுண்டனர், மீனுண்டனர், பாலுண்டனர், பழமுண்டனர்; சோறும் உண்டனர் சுவையுடைய நல்லனவெல்லாம் இனிதுண்டனர்.

பட்டாடையும் பருத்தியாடையும் உடுத்தினர். பொன்னும் முத்தும் மணியும் பிறவும் பூண்களாய் அவர்மேனியிற் கிடந்து அணி செய்தன. ஆடவரும் மகளிரும் ஒரொப்ப உயரிய அணிகளை அணிந்து கொள்வர். காதில் தோடும் குழையும் அணிவர். பூவும் தொடுத்து மார்பினும் முடியினும் சூடிக்கொள்வர். ஆடவர் தலையிற் சூடும் பூவணி கண்ணியெனவும் மார்பிலணிவது தார் எனவும் பெயர் பெறும். மகளிர் முடிக்குக் கூந்தல் குழல் என்றும், ஆடவர் முடிக்குக் குஞ்சியென்றும் பெயர் வழங்கும். மகளிர் வண்டு மொய்க்கும் பூக்களைக் கூந்தலில் அணிந்துகொள்வர். மகளிர் கூந்தலை அணிந்துகொள்ளும் முறை ஐந்து வகைப்படும்; அதனால் அவர் கூந்தல் ஐம்பால் என்றும் குறிக்கப்படுவதுண்டு. இளமகளிர் இடையில் ஆடைமேல் பசுந்தழையும் பன்னிறப்பூக்களும் விரவிய தழையுடை தொடுத்து உடுப்பதுண்டு. அவர்கள் கையில் வளையும் தொடியும் பெய்துகொள்வர்; தொடியினை ஆடவர் தோளில் அணிவதும் இயல்பு. மகளிர் காலில் சிலம்பும் விரல்களில் ஆழியும் அணிவர்; ஆடவர் காலிற் கழல் புனைந்து கொள்வர்.

ஆண்மக்களின் நினைவு சொல் செயல்களில் பெருமையும் உரனும் விளங்கி நிற்கும். கல்வி கேள்வியிலிருந்து மேலும் பல உயரிய நூல்

களை ஓதுதல், போர்வினை முதலிய வினை பலவும் செய்தல், பொருளீட்டல் உழவு முதலியன செய்தல் ஆடவர்க் குரிய பொதுச் செயலாகும். மனைக்கண் இருந்து உணவுசமைத்தலும் மகப்பெற்றுப் புறந்தருதலும் ஆடவர்க்கு வேண்டும் உதவிசெய்வதும் சிறுபான்மை ஆடவர்தொழிற்குத் துணை புரிதலும் மகளிரின் பொதுப் பணிகளாகும். ஆடவர் மகளிர் இருவரும் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழப் பிறந்தவராதலின் அவர்கள் ஆணும் பெண்ணுமாய்க் கூடியே உலக வாழ்வு நடப்பது என்பதை நன்கு அறிந்திருந்தனர்; ஆணும் பெண்ணும் ஒருவர்க்கொருவர் துணையானு லன்றி உலகில் பண்பும் பயனுமாகிய அன்பும் அறனும் ஆற்றி இன்பம் பயவாது என்பது யாவர்க்கும் இனிது தெரிந்திருந்தது. ஒருவர்க் குரிய துணைவரைப் பிறர் தேடித் தருவது இயல்பன்மையின், அவரவரும் தமக்குரிய வாழ்க்கைத் துணையைத் தாமே தேடிக் கொள்வர். பெற்றமக்களை இனிது வளர்ப்பதும் அறிவும் ஒழுக்கமும் உடையராக்குவதும் பெற்றோர்க்குரிய கடனாகும்; ஆயினும் அவர்கள் எதிர்காலத்து நடத்துதற் கமைந்த வாழ்க்கைக்கு இன்றியமையாத துணையைத் தேர்ந்து கொள்ளும் உரிமை அவர் தம் மக்களிடையே விடுவிக்கப் பட்டிருந்தது; மக்களைப் பெற்றோர்க்கு அமைந்த கடமைகளையும் உரிமைகளையும் கண்டு உரைத்த திருவள்ளுவர், மக்கட்குத் தக்க துணையைத் தேடி மணம் புணர்ப்பது கடன் என்று கூறாமையே இதற்குச் சீரிய சான்றாகும். ஒருவன் ஒருத்தியைத் தனக்குத் துணையெனத் தேர்ந்து கொண்டபின் நாடறிய மணம்செய்து கொள்ளுங் காலத்தில் பெற்றோர் முதலிய சான்றோர்களின் உதவியையும் வாழ்த்துக்களையும் பெறுவான். "போனகம் என்பது தான் உழந்துண்டல்" என்ற பொருள் மொழியே அவன் உள்ளத்தில் முற்பட நிற்கிறது. பெற்றோர் பொருளைத் தான் பெற்று இனிது வாழலாம் என்ற கருத்து அவன் நினைவில் நிகழ்வதையே காணோம். மணம்செய்து கொள்ளக் கருதும் மகளிரும் தம்மைத் துணையென நாடும் ஆடவர் தமக்கென மனையுப்

பொருளும் தாமே முயன்று தேடி நல்கும் திறனுடையாக இருப்பதையே கருத்திற்கொண்டு ஒழுகுகின்றனர்.

மணம் செய்துகொண்டு வாழ்க்கை மேற்கொள்ளும் மக்கள் அன்பால் ஒருவரை யொருவர் இன்றியமையாத மனப்பிணிப்புற்று மகப்பெற்று விருந்தோம்பி அறவோர்க்களித்தும் அந்தணரோம்பியும் துறவோர்க்கெதிர்ந்தும் இம்மையிற் புகழும் மறுமையில் வீடுபேறும் பெறுவதே வாழ்வின் குறிக்கோளாகக் கொள்வர். பொருள் விளைத்தலும் நாடுகாத்தலும் வறியார்க்கீத்தலும் உயர்ந்தோர்ப்பேணலும் தாழ்ந்தோரை உயர்த்தலும், ஒப்புரவு செய்தலும் சுற்றம் சூழ்தலும் மனைவாழ்வோர் கடனாகின்றன. உடலோடு கூடி வாழும் உயிர்கள், உடல் இறப்பினும் தாம் அழிவதில்லை யென்றும், அவரவர் செய்யும் வினைகட்கேற்பவே உடம்பும் இன்பமும் துன்பமும் உளவாகின்றன என்றும், வினைப்பயனை நுகர்தற்பொருட்டு மறுமையில் மாறிப்பிறக்கு மென்றும் செய்யப்படுகின்ற வினைக்கும் செய்கின்ற தமக்கும் உண்டான தொடர்பு, வினையின் பயனை நுகர்ந்தாலன்றி நீங்காதென்றும், அத்தொடர்பும் கடவுள் வழிபாட்டால் உயிர் பிறப்பறுமிடத்துப் பற்றுக்கோடின்றிக் கெடும் என்றும் தமிழ் மக்கள் வாழ்வில் வேரூன்றியிருந்தன. ஒருத்தியும் ஒருவனும் வாழ்க்கைத் துணையாதற்கு மனவொருமையும் வினைத் தொடர்பால் உளதாவது என்று பண்டையோர் கருதினர். அதனால் வாழ்க்கைத் துணையைத் தேடிக்கொள்ளும் பொறுப்பைப் பெற்றோர் மேற்கொள்ளவில்லை. சான்றோரும் அதனை வற்புறுத்தாது வாழப்புகும் ஆடவர் பெண்டிர்பாலே அதனை விடுத்தனர். இளமையிற் பிணங்கிப் பூசலிட்டுக்கொண்ட ஒருவனும் ஒருத்தியும் பின்னர்க் கணவனும் மனைவியுமாய் மணஞ்செய்துகொள்ளக் கண்ட சான்றோர் ஒருவர்,

> "இவன் இவள் ஐம்பால் பற்றவும், இவள் இவன்
> புன்றலை ஓரி வாங்குநள் பரியவும்

காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது
ஏதில் சிறுசெரு உறுப மன்னே;
நல்லைமன் றம்ம பாலே மெல்லியல்
துணைமலர்ப் பிணையல் அன்ன இவர்
மணமகிழ் இயற்கை காட்டியோயே''

என்று கூறுகின்றார். இதன்கண், இருவர் காதலொருமைக்குக் காரணம் முன்னை வினைத்தொடர்பு என்பதை வற்புறுத்தற்கு, "நல்லைமன் றம்ம பாலே'' என்று வியந்து பாராட்டிக் காட்டுதல் காணலாம்.

மனைவாழ்வில் ஈடுபட்ட மக்கள் தம்முடைய முயற்சி உழைப்பு முதலியவற்றை அடிப்படையாகக்கொண்டே தமது வாழ்க்கையை நடத்தினர். அதனால், வாழ்க்கைக்கு வேண்டப்படும் பொன்னும் பொருளும் குறித்துக் கடவுளை அவர்கள்வழிபட்டதில்லை; போரில்வெற்றியும் பகைவர் வீழ்ச்சியும் விரும்பிக் கடவுளை வேண்டவில்லை. தெய்வங்களைப் பரவுமிடத்தும், "யாம் இரப்பவை, பொருளும் பொன்னும்போகமுமல்ல, நின்பால், அருளும் அன்பும், அறனும் மூன்றும், உருளிணர்க் கடம்பின் ஒலி தாரோயே'' என்றே வேண்டினர்.

இனி, தமிழ் மக்களிடையே மகளிர் மாண்பு தனி நிலையில் விளக்கம் பெறுகிறது. பேதை பெதும்பை என்ற இருபருவத்தும் தம்மைப் பெற்றோர் ஆதரவில் அழகின் கொழுந்து வளர்வதென வளர்கின்றனர். இக் காலத்தே பெற்றோரால் திருந்திய கல்வியும் பொருந்திய ஒழுக்கமும் பெறுகின்றனர். கடிமணமானபின் கணவன் காவலிலிருந்து நல்லறம் புரியும் திறத்தால் தன்னை மனைவியாகப் பெற்றவனுக்குத் தமிழ் மகள் உயிர்க்கு இனிய உறுதி பயக்கும் துணைவியாய் அவன் உவப்ப மக்களைப் பயந்து இன்புறுகின்றாள். "கணவர் உவப்பப் புதல்வர்ப் பயந்து...புலவுப்புனிறு தீர்ந்து பொலிந்து சுற்றமொடு, வளமனைமக

ளிர் குளநீர் அயர" என மாங்குடி மருதனார் கூறுவர். முதுமை எய்தியவழிக் கணவனொடு தானும் மறுமைக்குச் சிறந்த நல்வினையை ஆற்றுவள்." கிழவனும் கிழத்தியும், சிறந்ததுபயிற்றல் இறந்ததன்பயனே" என்பது தொல்காப்பியம். இதன்கண் இறந்தது என்பது வயது முதிர்தலைக் குறிக்கும்; "இளமையும் தருவதோ இறந்த பின்னே" (கலி. 15) என இப் பொருளில் சான்றோர் வழங்குவது காண்க. ஒரு கால், அவள் உயிரோடு இருக்கும் பொழுதே கணவன் இறக்க நேரில், தானும் அவன் உயிரோடு உடன்கட்டையேறி மாய்தலும் உண்டு. இன்றேல், மறுமையில் கணவனைக் கூடல்வேண்டிக் கைம்மை நோற்பதும் இயல்பு. மறுமணம் செய்து கோடல் தமிழ் மகளிர்க்கு இயல்பன்று.

இத் தமிழ்மகளிரது இளமை காமஞ் சாலா இளமை, அது சான்ற இளமை என இருதிறமாக இயலுகின்றது. காமஞ்சாலா இளமைச் செவ்வியில் இம் மகளிர் புறத்தே சென்று விளையாடுவர். சிற்றில் புனைதலும் சிறுசோறு அடுதலும், பாவை வைத்து விளையாடலும், அம்மனை கழங்கு கழல் பந்து முதலியன கொண்டு விளையாடுவதும் பிறவும் விளையாட்டுக்களாகும். பூக் கொய்து மாலை தொடுத்தலும் தழை புனைதலும் சிறிது முதிர்ந்த இளமகளிர் செய்வர். காமம் சாலும் பருவத்தில் குன்றவர் மகளிர் தினைப்புனம் காப்பர்; ஆய் மகளிர் ஆனிரை பின் சென்று பால் கொணர்வர்; வேளாண்மகளிர் ஆம்பலும் தாமரையும் பிறவும் கொண்டு தழை புனைந்து விளையாடுவர்; புதுநெல் முற்றிய வயலின் கண் நெல்லைப் பிசைந்து பாசவல் இடித்து உண்டு மகிழ்வர்; நீர் நிலையில் ஓரை யாடுவர். பரதவர் மகளிர் மீன் கவர வரும் புள்ளினம் ஓப்புவர்; கடற் கானலில் புன்னை நிழலில் வண்டலயர்தலும் அலவனை அலைத்தலும் அவர்கட்குவிளையாட்டு வகையாகும். காமஞ்சான்ற பெதும்பைப் பருவத்தில் செல்வ மகளிர் மனைப்புறத்தே போகவிடாது இற் செறிக்கப்படுவர். முல்லை அவரை வயலை முதலிய கொடிவகைகளை

யும் புன்னை முதலிய மரஞ் செடிகளையும் நட்டு வளர்ப்பர். அவர்கள் இற்செறிக்கப்படும் திறத்தை

"......................முள்ளெயிறு இலங்கின
தலைமுடி சான்ற, தண்தழை உடையை;
அலமரல் ஆயமொடு யாங்கணும் படாஅல்;
மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய;
காப்பும் பூண்டிசின், கடையும் போகலை;
பேதையல்லை, மேதையங் குறுமகள்
பேதும்பைப் பருவத்து ஒதுங்கினை" (அகம். 7)

என்பதனால் அறிகின்றோம்.

பெதும்பைப்பருவத்தில்தான் தமிழ்ச் செல்வி தனக்கு வாழ்க்கைத்துணையாகும் காதலனைத் தேர்ந்து கொள்வள். இற்செறிக்கப்படினும், இவள் தன் மனைவரைப்பில் யாண்டுவேண்டினும் இனிது செல்வள். இப்பருவத்தே இவட்கும் பெண்மைக்குரிய சீர்த்தபண்புகள் நிறைந்துவிடுகின்றன. "அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த, நிச்சமும் பெண்பாற்குரிய என்ப" என்று தொல்காப்பியர் கூறுகின்றார். பிற்காலத்தார் அச்சம் முதலிய மூன்றனோடு பயிர்ப்பு என்ற குணத்தைக் கூட்டி நான்கு எனக் கொண்டனர். மடன் என்றது இளமை மனப்பான்மை. பயிர்ப்பு என்பது தாய்மைப்பண்பு. இவற்றின் வேறாகக் கற்பு என்னும் தகைமையொன்று தமிழ் மகளிர்க்கு இன்றியமையாத ஒன்றாகச் சான்றோர் வற்புறுத்துகின்றனர். கற்பு என்பது கல்வியறிவு வழியாகப் பிறக்கும் திண்ணிய ஒழுக்கம். தன் மென்மைத் தன்மையைப் பெற்றோராலும் சான்றோராலும் நூல்களாலும் அறிந்து எக்காலத்தும் தற்காத்துத் தற்கொண்டானைப் பேணியொழுகுதல் கற்பு வளரும் நெறியாகும். விலங்குணர்ச்சி மீதூர்ந்த ஆணாற் கவவப்படின் அவ்வுணர்ச்சிக்கு இரையாய்க் கெடுவதல்லது

தடுக்கும் வன்மையில்லாத வகையில் உடல் அமைந்திருப்பது பெண்மையின் மென்மை. நூலாராய்ச்சியும் அகப்பட இக்கற்பு என்னும் சொல் நிற்பதனை அறியாதார் தாம் மனம் போனவாறு கூறி அதன் உண்மைப் பொருளை மறைத்தனர்; சிலர் அதனைப் பதிவிரதம் என்று கொண்டனர்; அவர் அது கற்பறத்தின் ஒரு கூறு ஆவதை அறிந்திலர். "உலகம் தோன்றிய மேம்படுகற்பின், வில்லோர் மெய்ம்மறை". (பதிற். 59) எனக் காக்கைபாடினியார் என்ற பெண்பாற் புலவர் ஆடுகோட் பாட்டுச் சேரலாதனைப் பாடுதலால் கற்பினைக் கல்விமேல் நிறுத்தி வழங்கியிருப்பதும், எத்துணை இடுக்கண்வரினும் தம் கல்வியறிவு மழுங்காத பான்மையைத் "தொலையாக்கற்பு" என்றும், நால்வேதத்தை "எழுதாக் கற்பு" என்றும் பண்டையோர் குறிப்பதும் யாம் மேலே கூறிய கருத்தை வற்புறுத்துவன. இதனால், அச்சம் முதலிய பெண்மைக் குணங்கட்கு மேலாக இக்கற்பென்னும் மனத்திண்மையே தொல்காப்பியர் முதலிய பெருமக்களாலும் அவர்கட்கு முன்னோராலும் எடுத்தோதப் படுகிறது. "உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும், செய்ர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று எனத் தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சம்" எனவும், "உயிரும் நாணும் மடனுமென்றிவை, செயிர்தீர் கற்பின் நால்வர்க்கும் உரிய" எனவும் "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும், திண்மை உண்டாகப் பெறின்" எனவும் வருவன இவ்வுண்மைக்குச் சான்று பகரும். பிறிதோரிடத்தே இம் மகளிர் பாலுள்ள சிறப்புடைய குணம் கூறலுற்ற தொல்காப்பியனார், உயிரினும் நாணினும் சிறந்த கற்பினைக் கற்பென்னாது அதன் பயனும் விளையும் அறிவை விதந்து, "செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும், அறிவும் அருமையும் பெண்பாலான" என்று ஓதினர். மகளிர்க்குத் தவத்தினும் கற்பே வலியுடையதென்று இடைக்காலத்தார் கருதினர். அதனை, "புனமயிற் சாயற்கும் புண்ணிய முதல்விக்கும் என்திறம் உரையாதேகு" (சிலப். 11: 199-200) என்பதன் உரையில் அடியார்க்குநல்லார் உரைப்பதனால் அறியலாம்.

கணவன் ஒருவனைக் கடிமணம் செய்துகொள்ளும் கடப்பாட்டினை யுடைய தமிழ்ச் செல்விபால் "கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும், மெல்லியற் பொறையும் நிறையும் விருந்துபுறந்தருதலும் சுற்றம் ஓம்ப லும்" ஆகிய நலம்பலவும் அமைந்துவிடுகின்றன. கணவனாகிய "அவன் வரம்பு இறத்தல் தனக்குஅறமன்று" என்றும், "அவன்சோர்வுகாத்தல் கடன்" என்றும் நிலவும் கற்பு நெறி அவட்கு இயல்பாய்ப் பொருந்து கின்றன. அவன்பால் தவறுண்டாயின் அவனைத் "தாய்போல்கழறி" உணர்வித்துத் "தழீஇக்கோடல்" என்னும் பெருந்தன்மைக்கு இவள் உரியளாய்விடுகின்றாள். நாட்செல்லச் செல்லத் தன் வயிற்றிற் பிறக் கும் மகனுக்கும் நற்கடன் அறிவுறுத்தும் நன்மகளாகின்றாள்.

> "ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
> சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
> நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
> வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
> ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
> களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

என்பது அவள் தன் மகனுக் குரைக்கும் செவ்வை நன்மொழியாகும்.

இன்ன நலங்கட்கு இடனாகிய தமிழ்ச் செல்வி பெதும்பைச் செவ்வி கடந்து கணவனொருவனை வாழ்க்கைத் துணை யெனத் தேர்ந்து கடி மணம் செய்து கொள்ளும் திறமும் அவனுக்கும் தனக்கும் உயிரொன் றிய காதலன்பை வளர்க்கும் திறமும் ஆராய்வோர்க்கு மிக்க இன்பத் தைத் தருவனவாகும். இவை பெரும்பாலும் பெற்றோரும் பிறரும் அறியாதவகையில் நிகழ்தலால் இவ்வொழுக்கம் களவொழுக்கம் எனப் படுகிறது; இதனை வடநூல் கூறும் காந்தருவம் போலும் கடிமண வகை என்பர்; ஆயினும் காந்தருவ நெறியில் கூடுபவர்க்குப் பின்பு "நாடறி நன்மணம்" செய்து கோடல் வேண்டுமென்ற அறுதி கிடை

யாது. நன்மணம் செய்துகொள்ளாமலே மகப்பேறு முதலியன எய்துவர். தமிழர் பண்பாட்டில் இது குற்றமென்று விலக்கப்பட்டது. மணம் புணர்ந்த பின்பே மகப்பேற்றுக்குரிய புணர்ச்சி நிகழும். திருமணத்துக்கு முன்னதாகிய களவுக் காலத்தில் மகப்பெறு புணர்ச்சியும் மகப்பேறும் நிகழ்வது கிடையாது. களவின்கண் காதல் சிறந்து முதிர்ந்து ஒருவரையொருவர் இன்றியமையாத் தொடர் பெய்தி மேன்மை யுறுவதும், அது வெளிப்பட்ட பின்பும் சிறிது முன்பும் பெற்றோரும் சான்றோரும் அறிய வரைதலும் மணம்புரிந்து கோடலும் இவ் வொழுக்கத்தின் கூறுகளாகும். காதலர் இருவர் கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றித் தாமே தமித்துக் கண்டும் பயின்றும் பழகியும் மனங்கலந்து அன்பு சிறந்து நிற்கும் இயைபு ஒன்றே கருதி ஆசிரியர், "காமக் கூட்டம் காணுங் காலைத் துறையமை நல்லி யாழ்த் துணைமையோர் இயல்பே" என ஓதினர்.

இவ்வொழுக்கமே பழந்தமிழ் வாழ்வில் மக்கள் மணம் புரிந்து மனைவாழ்க்கையில் இறங்குதற்கு முன்னணியாக நடந்தது. தம்கால மக்கள் வாழ்க்கையின் நலங்கண்டு அவர்கள் எதிர்காலத்திலும் இன்பம் குன்றாத அறவாழ்விலே நின்று பெரும் பயன் எய்தவேண்டுமென்ற பரந்த எண்ணத்தால் வழக்கு நூலாகிய திருக்குறளை வகுத்தளித்த தெய்வப் புலவர் திருவள்ளுவனார், ஒருவனும் ஒருத்தியும் வாழ்க்கைத் துணையாதற்கு இன்றியமையாத காதலன்பு ஒழுக்கத்தைத் தனியே நிறுத்திக் காமத்துப்பால் என்ற பகுதியின்கண் வகுத்தும் விரித்தும் உரைக்கின்றார். இதுவே யன்றி, சிறுபான்மை கொல்லேறு தழுவியும் பன்றி யெய்தும் இவை போலும் ஆண்மைச் செயல்கள் பல செய்தும் மேன்மையுற்ற ஆடவனுக்கு மகட்கொடை செய்தொழுகும் மணமுறையும் இருந்திருக்கிறது.

# தமிழர் திருமணம்

திரு, டாக்டர் மா. இராசமாணிக்கனார் தமிழ்ப்பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

## இக்காலத் திருமணம்

இக்காலத் தமிழர் திருமணத்தில் புரோகிதன் இடம் பெறுகிறான்; எரி ஓம்பப் படுகிறது; மணமக்கள் தீ வலம் வருகின்றனர்; அம்மி மிதிக்கப்படுகிறது; அருந்ததி காட்டப்படுகிறது. மணமகன் காசி யாத்திரை போகிறான்; புரோகிதன் தமிழர் திருமணத்தில் தமிழர்க்குப் புரியாத வேற்று மொழியில் மந்திரங்களைச் சொல்கிறான். இவை எல்லாம் அகநானூறு போன்ற பழந்தமிழ் நூல்களில் கூறப்பட்டிருக்கின்றனவா? இவை தமிழருக்குரிய திருமணச் சடங்குகளா?

## செய்யுள் 86

அக நானூறு என்னும் தொகை நூலில் இரண்டு பாக்களில் இரண்டு திருமண நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் செய்யுள் 86 குறிக்கும் திருமணச் சடங்குகளை இங்குக் காண்போம்:

திருமண வீட்டு முற்றத்தில் வரிசையாகக் கால்களை நிறுத்திப் பந்தல் போடப்பட்டிருந்தது. மணவறையில் மாலைகள் தொங்க விடப்பட்டிருந்தன. விளக்கு ஏற்றப்பட்டு இருந்தது. ஒரு பால் உழுத்தம் பருப்புடன் கூட்டிச் சமைத்த பொங்கலோடு மண விருந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. சந்திரனும் உரோகணியும் கூடிய விடியற்காலையில் முதிய மங்கல மகளிர் மணப் பெண்ணை நீராட்டுதற்குரிய நீரைக் குடங்களில் கொண்டு வந்து தந்தனர். மக்களைப் பெற்ற வாழ்வரசிகள் நால்வர் அக் குடங்களை வாங்கி, "கற்பு நெறியினின்றும் வழுவாமல் நல்ல பல பேறுகளையும் தந்து கணவனை விரும்பிப் பேணும் விருப்

பத்தை யுடையை ஆகுக," என்று வாழ்த்திக் கொண்டே மணமகளை நீராட்டினர். அந் நீரில் மலர்களும் நெல் மணிகளும் இடப்பட்டிருந் தன. இங்ஙனம் நீராட்டப் பெற்ற மணமகள் புத்தாடை அணிந்து மணப் பந்தலில் அமர்ந்தாள். பின்பு சுற்றத்தார் விரைந்து வந்து "பெரிய மனைக் கிழத்தி ஆவாய்," என்று வாழ்த்தினர். அன்று இரவு மணமக்கள் ஒன்று கூடினர்.

"உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் டிங்கள்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
'கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை யாகே'ன
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க,
வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
'பேரிற் கிழத்தி யாகே'னத் தமர்தர
ஓரிற் கூடிய உடன்புணர் கங்குல்"

### செய்யுள் 136

திருமண நாளன்று இறைச்சியுடன் கூட்டி ஆக்கிய நெய் மிகுந்த வெண்சோறு மணத்திற்கு வந்த அனைவருக்கும் படைக்கப்பட்டது. பின்பு சந்திரனும் உரோகணியும் கூடிய நல்ல நேரத்தில் மணவறையில் கடவுள் வழிபாடு நடைபெற்றது. முரசம் முதலிய வாத்தியங்கள் ஒலித்தன. முன் சொன்ன முறைப்படி மணமகள் மண நீராட்டப்பட்டாள். மணமகள் தூய உடையிற் பொலிந்தாள். அப்பொழுது சுற்றத்தார் அவளை வாழ்த்தி மணமகனுக்குக் கொடுத்தனர்.

"மைப்பறப் புழுக்கி னெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையோடு புரையோர்ப் பேணிப்
புள்ளுப்புணர்ந் தினிய வாகத் தெள்ளொளி
அங்க ணிருவிசும்பு விளங்கத் திங்கட்
சகட மண்டிய துகளர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்
படுமண முழவொடு பருஉப்பணை யிமிழ
வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்றுப்
பூக்கணு மிமையார் நோக்குபு மறைய
மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை
பழங்கன்று கறித்த பயம்பம லறுகைத்
தழங்குகுரல் வானின் றலைப்பெயற் கீன்ற
மண்ணுமணி யன்ன மாயிதழ்ப் பாவைத்
தண்ணறு முகையொடு வெண்ணூல் சூட்டித்
தூவுடைப் பொலிந்து மேவரத் துவன்றி
மழைபட் டன்ன மணன்மலி பந்தர்
இழையணி சிறப்பிற் பெயர்வியர்ப் பாற்றித்
தமர்நமக் கீத்த தலைநா ளிரவின்"

இவ்விருவகைத் திருமணங்களிலும் இக்காலத் திருமணச் சடங்குகள் இடம்பெறுமையைக் காண்க. மணமகளை வாழ்வரசியர் வாழ்த்தி மணநீராட்டுதலும் சுற்றத்தார் பெண்ணைக் கணவனோடு சேர்ப்பித்தலுமே சிறந்த சடங்குகளாகக் கருதப்பட்டன என்பது தெளிவு. "கற்பு நெறியினின்றும் வழுவாமல் கணவன் உளங்கவர்ந்த காரிகை ஆகுவாய்," என்று வாழ்வரசியரால் கற்பிக்கப்பட்டதால் மணமகள் கற்புடையவள் ஆயினள். அங்ஙனம் கற்பிக்கப்பட்டபடி நடந்தவள் "கற்புடை மனைவி" எனப்பட்டாள்.

திருமணத்திற்கு இன்றியமையாதது, பலரறிய இருதிறத்துப் பெற்றோரும் மணமக்களை ஒன்றுபடுத்தலே ஆகும். இன்னவர் மகள் இன்னவர் மகனை மணந்துகொண்டாள் என்பதை அறியச்செய்வதே திருமணத்தின் சிறப்பு நிகழ்ச்சியாகும். முன்னரே வாழ்வரசியாக இருக்கும் பெண்கள் வாழ்வரசியாகப்போகும் பெண்ணை வாழ்த்தி நீராட்டுதல் வரவேற்கத்தக்கதே. இந்த இரண்டு திருமணங்களிலும் முதல் நிகழ்ச்சியாக விருந்துண்ணல் கூறப்பட்டுள்ளது. எல்லோரும் உண்டு மன மகிழ்ச்சியோடு வாழ்த்துக் கூறுதல் நல்லதுதானே !

இவ்விரண்டு திருமண முறைகளையும் படித்துத் தெளிந்த வரலாற்றுப் பேராசிரியர் திரு. பி. டி. சீநிவாசஐயங்கார் அவர்கள், "இவ்விரு திருமண முறைகளிலும் எரிவளர்த்தல் இல்லை; தீவலம் வருதல் இல்லை; தட்சிணை பெறப் புரோகிதன் இல்லை. இவை முற்றும் தமிழர்க்கே உரியவை," என்று கூறியிருத்தல் கவனிக்கத்தக்கது.

———

# சிலப்பதிகாரம்—கானல் வரி

பண்டித-வித்துவான், தி. சங்குப்புலவர், கணக்காயர், செந்தமிழ்க் கல்லூரி,
மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

## சார்த்துவரி (முகச்சார்த்துவரி) பொருள் விளக்கம்.

ஆற்றுவரி பாடிய கோவலன் பின் சார்த்துவரி பாடத் தொடங்கினான். சார்த்துவரி என்பது பாட்டுடைத் தலைவன் பதியோடும் பெயரோடும் சார்த்திப் பாடுவது. "புகாரே யெம்மூர்" என முடிந்து நிற்கின்ற மூன்று பாடல்களும் ஊரோடு சார்த்திப் பாடியிருப்பதால் சார்த்துவரி எனப் பெயர் பெற்றன. இவைகள் அகப்பொருட்கு உரிமையான துறை யமைந்திருக்கின்றன. இம் மூன்றிலும் "வரைவு கடாதல்" என்னுந் துறையே யமைந்திருக்கிறது.

"வரைவு கடாதல்" என்பது "மணம் புரிந்து கொள்வது எப்போது" என்று தலைவனிடம் தோழி வினவுதல் ஆகும். தலைவன் தலைவியை முதலிற் களவொழுக்கமாகப் புணர்ந்தான். பின்பு பாங்கனை வாயிலாகக் கொண்டு சில நாட் புணர்ந்தான். பாங்கியை வாயிலாகக் கொண்டு சிலநாட் கூடி யின்பம் நுகர்ந்தான். பகலிற் குறித்த இடத்திற்கு வருவதும் போவதுமாகத் தலைவன் இருந்ததாற் களவு வெளிப்படும் அளவில் நின்றது. பாங்கி தலைவனுக்கு நிகழ்ச்சியை யறிவித்தாள். மணம் புரிந்து கொள்வதுதான் நலமெனக் கூறினள். தலைவன் மணம்புரியக் கருதாமற் களவொழுக்கத்தையேவிரும்பினான். இடித்துக் கூற எண்ணினாள் பாங்கி. ஒரு நாட் பகலிற் குறியிடத்தில் வந்து நின்றான் தலைவன். பாங்கியும் அவன் பக்கத்திற் போய் நின்றாள். ஐய! என அழைத்தாள். முன்னிலையாகக் கூறாமற் படர்க்கையாகக் கூறுகின்றாள்.

(1) கருங்குவளை மலர் போன்ற கண்களையுடைய தலைவியை முன் களவிற் புணர்ந்தபோது கடலுக்குத் தெய்வமாகிய வருணனைக் காட்டிக் காட்டி எத்தனைச் சத்தியம் புரிந்தார் எமது காதலர். நின்னைப் பிரியேன், பிரிந்தால் உயிர் தரியேன். விரைவில் மணம் புரிவேன். ஒரு நாளும் உன்னை மறவேன். என்று சூளுரைத்தார். அத்தனையும் அடியோடு மறந்தார். எம்மையும் துறந்தார். இவ்வாறு பொய்யுரை கூறுவார் என்றும் அறநெறி யொழுகாது வழுவுவார் என்றும் நாங்கள் அக்காலத்தில் அறிந்தோமா? அறிந்திலோம். எவ்வாறு நாம் அறிவோம்?

நாங்கள் மிகவும் அறியாமை யுடையோம். எங்கள் ஊரில் உள்ள பொருள்களும் அறியாமையுடையனவே. அதற்கு எடுத்துக்காட்டாக ஒன்று கூறுவேன். அல்லி யரும்பு பொய்கையில் இருக்கும். அதன் அருகில் வெள்ளைச் சங்குகளும் முத்துக்களும் கிடக்கும். அவை வெண்ணிலாவும் விண் மீன்களும் போல ஒளி வீசும். அவற்றின் ஒளியைக் கண்டு சந்திரனும் தாரகையும் வந்தன என்று மலர்ந்து மணம் வீசும் அவ் வரும்புகள். அரும்புகளின் செயல் போலவே எமது செயலும் இருந்தது. பொய்யுரை கூறிய போலிக் காதலரை உண்மையொழுக்க முடைய உயர்ந்த காதலராக மதித்து மனமயங்கி முன்னர்க் கலந்தோம். இந் நாளில் இவ்வாறு இடர்ப்பட்டு நிற்கின்றோம் என்ற குறிப்புத் தோன்றக் கூறினள் பாங்கி.

(2) ஐய! எமது தலைவர் எமது தலைவிமேற் காதலுடையவராய்ப் பல காலமும் கழிக்கரை யருகே யுள்ள கானலுக்கு வந்தார். தழையும் கண்ணியும் எமக்குக் கையுறையாகத் தாங்கிக்கொண்டு வந்தார். நாங்கள் செல்லும் இடமெல்லாம் எமக்குப் பின்னே யலைந்து திரிந்தார். உண்மைக் காதல் உடையவர் போல நடித்தார். தலைவியைக் கூட்டுவிக்க வேண்டுமென என்பால் வந்து குறை யிரந்தார். நான் கூட்டுவித்தேன். கலந்து இன்பம் நுகர்ந்தார். இவ்வாறு மிகவும் எளியவராய் எம்பால் வந்து குறையிரந்து நின்றவர் இப்போது வரைவு வேண்ட உடன்படாது காலம் நீட்டித்து எம்மைக் கருதாது செல்கின்றார். அயலார் போல அருகே வருவதற்கும் நாணுகின்றார். நாங்கள் பலகாலமும் குறையிரந்து வேண்டவும் அம் மொழியைச் செவி யேற்றுக் கொள்ளாது வீணே நிற்கின்றார். அக் காலத்திற் காதலராய் வந்த அவர் இக் காலத்தில் ஏதிலராய் மாறி விடுவார் என்பதை நாங்கள் எவ்வாறு அறிவோம். அறியாமல் மயங்கி அவலம் அடைந்தோம். எம் ஊராகிய காவிரிப்பூம்பட்டினத்தில் சந்திரனது சாயை பொய்கை நீரில் தோன்றும், அச் சாயை யடுத்து இரண்டு நீலமலர் சேர்ந்து நிற்கும். அத் தோற்றம் பெண்கள் முகம் போலவும் அவரது கண்கள் போலவும் காட்சி யளிக்கும். நிலாக் காலத்திற் பெண்களும் பொய்கைக் கரையில் அமர்ந்து விளையாடுவார்கள். வண்டுகள், பெண்கள் கண்களுக்கும் பொய்கையில் உள்ள நீலமலர்களுக்கும் வேறுபாடு காண வியலாது மயங்கும். அம் மயக்கத்தால் நீல மலர்களிடத்திலும் பெண்கள் கண்களிடத்திலும் ஊசலாடுவது போலப் போவதும் வருவதும் ஆகத் திரியும். இவ் வியற்கை யுடையது எம்மூர் என்றாள். இதிலிருந்து வண்டு

கள் போலவே நாங்களும் மயங்கி உண்மைக் காதலுடையவரா? போலிக் காதலுடையவரா? எனத் தலைவரை யறிந்து கொள்ள வியலாது வருவதும் போவதுமாக வாடி வருந்துகின்றோம் என்பதைக் குறிப்பாக விளக்கினள்; என உள்ளுறை கொள்க.

(3) பின்னும் தோழி தலைவனை நோக்கி ஐய! மோதுகின்ற அலைகளால் அடிக்கப்பட்டுக் கடற்கரைக்கு வரும் சங்கு. அந்தச் சங்கு தளர்ந்து அடிபட்ட வருத்தத்தால் வாய்விட்டுப் புலம்பும். பின்பு தெளிந்து வரிவரியான மணலின் மேலூர்ந்து வந்து கன்னியர் விளையாடு மணல் வீட்டைக் கெடுக்கும். அதுகண்ட அக் கன்னியர் தமது கூந்தலிற் சூடியிருக்கும் குவளைமலர் மாலையைத் தமது மெல்லிய விரல்களாற் பறித்து அடித்துத் துரத்துவார். அப்போது அம் மாலையிலிருந்து சிதறி விழுந்த குவளை மலர்கள் மாலைக்காலம் வந்தபோது வாடி யுலர்ந்து சுருங்கித் தோன்றும். மணற்பரப்பில் வாடிக்கிடக்கும் அம் மலர்கள் மனிதர் கண்ணைச் சுருக்கி விழிப்பதுபோலக் காட்சியளிக்கும். ஊர்க்குட் செல்வதற்குக் கருதி வரும் புதியவர்கள் மனிதர் கண்களோ என்று ஐயுற்றுப் பார்த்த பார்வை நீங்காது மருண்டு நிற்பர். இவ் வியற்கை யுடையது எம்மூர் ஆகிய காவிரிப்பூம்பட்டினம் என்றாள். எம்மூரின் இயற்கை போலவே எமது செயலும் இருக்கிறது என்பது குறிப்புரையாகும். இச் செய்யுட் பொருள் உள்ளுறை கொள்ளக் கிடக்கின்றது.

ஐய! காதலர் ஆகிய நீர் முதலில் காமக் கடலிற் காதல் நோயால் அலைக்கப்பட்டு எம்பால் வந்தீர். தளர்ந்து காம மயக்கத்தால் வாய் விட்டுப் புலம்பினீர். பின்பு எமது தலைவியைக் கூடிக் கலந்து இன்பம் நுகர்ந்து பிரிந்து அவளுடம்பில் நோயும் பசலையுந் தோன்ற எழிலைக் கெடுத்தீர். அது கண்டு நாங்கள் மணம் புரிந்து கொள்ளுமாறு வற்புறுத்தித் துரத்தி வெருட்டினோம் எமது கடுஞ் சொற்களால். நாங்கள் கூறிய சொற்கள் பரந்து ஊர்முழுவதும் பழிச் சொல்லுக் கிடமாயின. இஃது உண்மை நிகழ்ச்சியோ பொய்யோ என ஐயுற்று உறவினரும் அயலாரும் மருண்டு பார்த்த வண்ணமாய் நிற்கின்றார்கள். இனி யென்ன நேருமோ என்று நாங்கள் மனங்கலங்கி வருந்துகின்றோம். நீங்களோ மனங்கலங்காது நிற்கின்றீர் எனக் கூறுமற் குறிப்பிற் கூறினள் தோழி. இதுவே இதன் உள்ளுறையாம். முன்னுள்ள இரண்டு கவிகளிலும் அமைந்த உள்ளுறை யுவமை

னும் இக் கவியில் அமைந்துள்ள உள்ளுறை மிகவும் அருமையுடையது. நுண் மாணுழை புலமுடையாரே இவ் வுவமையை விளக்கவல்லவர். அடியார்க்கு நல்லார் உரை கானல்வரிக்குக் கிடையாமையால் இது போன்ற உள்ளுறை பல இதுகாறும் விளங்காமலே யிருக்கின்றன. பின் உரை வரைந்த ஆசிரியர்களும் சொற்பொருளை மட்டும் விளக்கிச் சென்றனர் எனத் தெரிகிறது. பாக்களைப் படித்துக் காண்க:

## சார்த்துவரிப் (முகச்சார்த்துவரி) பாடல்கள்

கரிய மலர்நெடுங்கட் காரிகைமுன் கடற்றெய்வங்
காட்டிக் காட்டி
யரியசூள் பொய்த்தா ரறனிலரேன் றேழையம்யாங்
கறிகோ மைய
விரிகதிர் வெண்மதியு மீன்கணமு மாமென்றே
விளங்கும் வெள்ளைப்
புரிவளையு முத்துங்கண் டாம்பல் போதியவிழ்க்கும்
புகாரே யெம்மூர் (1)

காதல் ராகிக் கழிக்கானற் கையுறைகோண்
டெம்பின் வந்தார்
ஏதிலர் தாமாகி யாமிரப்ப நிற்பதையாங்
கறிகோ மைய
மாதரார் கண்ணு மதிநிழனீ ரிணைகோண்டு
மலர்ந்த நீலப்
போது மறியாது வண்டூச லாடும்
புகாரே யெம்மூர் (2)

மோது முதுதிரையான் மோத்துண்டு போந்தசைந்த
முரல்வாய்ச் சங்கம்
மாதர் வரிமணன்மேல் வண்ட லுழுதழிப்ப
மாழ்கி யைய
கோதை பரிந்தசைய மெல்விரலாற் கோண்டோச்சுங்
குவளை மாலைப்
போது சிறங்கணிப்பப் போவார்கண் போகாப்
புகாரே யெம்மூர். (3)

# நாட்டுவளம்

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனர், தமிழ்ப் பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

## சங்க காலத்தில்

வடவேங்கடத்திலிருந்து குமரிமுனை வரை பரவியுள்ள தமிழகத்தில் உள்ள மலைகள் எவை, அவை எங்கெங்கு இருக்கின்றன. அவற்றின் பெயர்கள் யாவை, அவற்றில் விளையும் பொருள்கள் எவை, தமிழகத்தில் பாயும் ஆறுகள் யாவை, அவை எங்குத் தோன்றி எவ்வெவ்வாறு பாய்கின்றன, அவற்றால் உண்டாகும் நன்மைகள் யாவை, தமிழகத்தில் காடுகள் எங்கெங்கு இருக்கின்றன, காட்டில் வாழும் விலங்குகள் யாவை, அவற்றாலும் காடுகளாலும் மக்களுக்கு உண்டாகும் பயன்கள் யாவை, நாட்டில் நெல் விளையும் இடங்கள் எவை, பிற தானியங்கள் விளையும் இடங்கள் எவை, பண்படுத்தப் படாத இடங்கள் எவை, அவை அங்ஙனம் இருக்கக் காரணம் என்ன என்பன போன்ற–நாட்டு வளத்தை அறியத்தக்க–செய்திகள் சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறே, சங்ககாலத் தமிழகத்தில் செய்யப்பட்டுவந்த கைத்தொழில்கள் யாவை என்பதும் சங்க நூல்களில் ஆங்காங்குக் குறிக்கப் பட்டுள்ளது. இங்ஙனமே பழங்காலத் தமிழகத்து உள்நாட்டு வாணிகம் கடல்வாணிகம் என்பன பற்றிய விவரங்களும் தமிழ்நூல்களில் காணப்படுகின்றன. பழந்தமிழர் இந்நாட்டுப் பொருள்களைக் கப்பல்களில் ஏற்றிக் கொண்டு பர்மா, மலேயா, கிழக்கிந்தியத் தீவுகள் முதலிய கிழக்கு நாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்தனர்; இவ்வாறே மேற்கு நாடுகளுக்கும் சென்று வாணிகம் செய்தனர்; பெரும் பொருள் திரட்டினர்; பல நாட்டாருடனும் தொடர்பு கொண்டு வாழ்ந்தனர். இங்ஙனம் கொண்ட உறவால்,

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்"

என்னும் கருத்தை வலியுறுத்தினர்.

## சங்ககாலப் புலவர்

சங்க காலப் புலவர்)இயற்கைப் பொருள்களை நன்கு அறிந்தவர்; நாட்டிலுள்ள மலைகள், ஆறுகள், விளைபொருட்கள், செய்பொருட்கள், கடல்படு பொருட்கள் முதலியவற்றை நன்கு அறிந்திருந்தனர். கபிலர் என்ற புலவர் பெருமான் குறிஞ்சி நிலப் பூக்கள் பலவற்றின் பெயர் களைக் குறிஞ்சிப் பாட்டில் தெளிவாகக் கூறியுள்ளார். மான்களின் வகைகள் குறிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு விலங்கின் இயல்பையும் புலவர்கள் கவனித்துள்ளனர்.

மலையும் மலைசார்ந்த இடமும் **குறிஞ்சி** எனப் பெயர் பெற்றது; காடும் காடுசார்ந்த இடமும் **முல்லை** எனப்பட்டது; குறிஞ்சிக்கும் முல் லைக்கும் இடையே ஒன்றும் விளையாத பொட்டல் நிலம் **பாலை** எனப் பட்டது; வயலும் வயல் சார்ந்த இடமும் **மருதம்** எனப்பெயர் பெற் றது; கடலும் கடல் சார்ந்த இடமும் **நெய்தல்** எனப் பெயர்பெற்றது; இந்த ஐவகைநிலங்களிலும் உள்ள விளைபொருட்கள்; மக்கள் தொழில் கள், விலங்குகள், பறவைகள், அவற்றின் இயல்புகள் என்பன போன் றவை எல்லாம் சங்கநூல்களில் புலவர் பெருமக்களால் விவரமாகக் குறிக்கப்பட்டுள்ளன. நூற்றுக் கணக்கான மரங்களின் பெயர்கள், செடிகொடிகளின் பெயர்கள் முதலியன பழம் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

பீடு மிக்க மாட மதுரையும் கோட்டைச் சுவர்மீது வைக்கப்பட்டி ருந்த போர்க்கருவிகளின் பெயர்கள் **சிலப்பதிகாரத்தில்** குறிக்கப் பட்டுள்ளன. இந் நாட்டிலிருந்து அயல் நாட்டிற்கு ஏற்றுமதியான பொருள்களும் இறக்குமதியான பொருள்களும் **மதுரைக்காஞ்சி** முத லிய பாக்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. குறிஞ்சி முதலிய ஒவ் வொரு நிலத்திலும் வாழ்ந்த மக்களின் உணவுப் பொருள்கள் இன் னவை என்று அறிவிக்கப்பட்டுள்ளன. மதுரை போன்ற பெருநகரங் களில் இருந்த கடைகளில் விற்பனையான விளைபொருள்களும் செய் பொருட்களும் இன்னவை என்பது சிலப்பதிகாரம் முதலிய நூல்க ளால் தெளிவாகின்றன. இவை அனைத்தையும் பார்க்கும்பொழுது, தமிழ்நாட்டு இயற்கை வளத்தையும் செயற்கை வளத்தையும் நன்கு அறிந்து மகிழ இடமுண்டாகிறது.

இக் காலத்தில் ஆங்கில ஆட்சியால் நமது நாடு விஞ்ஞான வசதிகளைப் பெற்றுள்ளது; உலக அறிவைப் பெற்றுள்ளது. இக் காலத்தில் தமிழ்நாட்டு மலைகள் மக்களுக்கு எவ்வாறு பயன்படுகின்றன, ஆறுகள் எவ்வாறு உதவுகின்றன, நாட்டின் விளைபொருள்கள் யாவை, செய்பொருள்கள் யாவை, இன்னும் எவ்வெத் துறைகளில் முயன்று நாட்டை வளப்படுத்தலாம், பாலைவனப் பகுதிகளை எவ்வாறு சோலைப் பகுதிகளாக மாற்றலாம் என்பனபோன்ற விவரங்களை மக்கள் அறியத் தகும் முறையில் நூல்கள் வெளிவருதல் வேண்டும்.

## கோடைக்கானல்

கோடைக்கானல் மலைத்தொடரில் வாழைத் தோட்டங்கள் வளமாகப் பயிராகின்றன; திராட்சை பயிராகின்றது; சில கிழங்கு வகைகள் பயிராகின்றன; தைல மரங்கள் பயிராகின்றன; தேக்கு, கருங்காலி முதலிய உயர்ந்த மரவகைகளும் பயிராகின்றன. இன்னும் பதப்படுத்தப் படாத இடங்கள் இவை இவை என்ற விவரங்கள் பொதுமக்களுக்குத் தேவைப்படுகின்றன. இவ்வாறு ஒவ்வொரு மலைத்தொடரைப் பற்றிய விவரங்கள் பைந்தமிழில் வெளிவருதல் வேண்டும். வேலையில்லாத மக்களை இத்தகைய மலைப்பகுதிகளில் குடியேற்றி நிலங்களை அழித்து வாழ வழி செய்யலாம். இவ்வாறே தமிழகத்துக் காடுகள் இவை, இவற்றால் உண்டாகும் நன்மைகள் இவை என்பன போன்ற விவரங்களையும் தமிழில் தருதல் வேண்டும். தமிழ் நாட்டில் இன்று விஞ்ஞான அறிவால் நடைபெறும் தொழில்கள் இவை என்ற விவரங்களும் தேவை.

## கல்வித் திட்டம்

தமிழ் நாட்டு மாணவர்க்கு எட்டாம் வகுப்பு வரையில் தமிழ்நாட்டுப் பூகோளம், வரலாறு, கைத்தொழில், பயிர்த்தொழில், போக்குவரவு, ஏற்றுமதி, இறக்குமதி, வணிகம், சமுதாய நிலை முதலியவை பற்றிய அறிவை நன்கு வளர்க்கும் முறையில் புதிய பாடத்திட்டம் அமைய வேண்டும். ஒவ்வொரு தமிழ்மகனும் தன் நாட்டைப் பற்றிய எல்லா விவரங்களும் அறிந்து கொள்ளும் முறையில் கல்வித் திட்டம் மாற்றி அமைக்கப்படல் வேண்டும். இதனை விடுத்து உலக நாடுகளைப் பற்றி அவன் அறிவு பெறுவதில் என்னபயன் உண்டாகும்?

# தமிழ்ப்பெரியார் : கதிரைவேற்பிள்ளை

மாலதீதேணி மணி.

காலஞ்சென்ற திரு. நா. கதிரைவேற்பிள்ளையவர்கள் புகழ் பாரத-ஈழநாட்டில் எங்கும் பரவியுள்ளது. யாழ்ப்பாணத்து மேலைப்புலோலியில் இவர் 1860-ஆம் ஆண்டு பிறந்தார். இளமையிலேயே இலக்கணம் இலக்கியம் தருக்கம் சித்தாந்தம் இவற்றை முறையாகப் பயின்றவர் இவர்.

சென்னைச் சைவசித்தாந்த சபையினர் இவருக்கு 'சதாவதானி'ப் பட்டம் வழங்கினர். ஆரணி அரசரின் அவைக்களப் புலவராய் அமர்ந்ததோடு 'அத்துவிதசித்தாந்தமத உத்தாரணர்' 'மாயாவாததும்சகோளரி' என்ற சிறப்புப் பெயர்களும் இவர்க்குப் பொருந்தின. மதுரைத்தமிழ்ச் சங்கத்தின் தனித்தமிழ்த் தேர்வாளராகவும் இவர் பணி புரிந்தவர்.

சைவமும் தமிழும் தழைக்க இவர் இயற்றிய தொண்டுகள் பல. சிவ க்ஷேத்திராலய மகோற்சவ விளக்கம், திருஞானசம்பந்தமூர்த்தி சரித வசனச் சுருக்கம், சைவபூஷண சந்திரிகை, தமிழ்போகராதி, புத்தமத கண்டனம் முதலியனவாக இருபது நூல்களின் ஆசிரியர் இவர். இவற்றோடு சிறந்த உரையாளர், பேச்சாளர், தருக்க நிபுணர் என இவர் பலவகை ஆற்றலும் படைத்து விளங்கினர். இவர் 47-வது வயதில் நீலகிரியில் இறைவனடி சேர்ந்தார்.

இவரது 50-வது ஆண்டு நினைவு நாள் 11—4—57 ஆகும். மேலைப் புலோலியில், கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், கலா மன்றம் என இரண்டு இவர் நினைவடையாளமாக நிலவுகின்றன. இவர்போன்ற தமிழ்ப் பெரியாரை எப்போதும் காண்பதரிது. வாழ்க இவர் புகழ்.

# தமிழில் கலைச் சொல்லாக்கத்திற்கு

## எழுத்துப் பெயர்ப்புச் சிறந்ததா? மொழி பெயர்ப்புச் சிறந்ததா?

திரு. எஸ். அல்லா பிச்சை, தியாகராசர் கல்லூரி, மதுரை.

"தமிழே தமிழ் நாட்டின் ஆட்சி மொழியாக வேண்டும்; தமிழே வழக்குரை மொழியாக வேண்டும்; தமிழே கல்லூரிகள் கற்பிக்கும் மொழியாக வேண்டும்" என்பன போன்ற உரிமைக் குரல்கள் தமிழக மெங்கும் பரந்து ஒலிக்கும் இந் நாளில் தீந்தமிழ் மொழியைப் பல துறைகளிலும் மேன்மேலும் வளர்ச்சி பெறச் செய்ய வேண்டிய இன்றியமையாமை இன்று ஏற்பட்டுள்ளது.

புதுமை இடம் பெறுதல் வேண்டிப் பழைமை விலகுகிறது. (Old order changeth yielding place to new) என்றநல்லுரையை உளத்திற் கொண்ட மேனாட்டார் காலத்திற் கேற்றபடி பல மாற்றங் களை ஏற்றுக்கொண்டு இன்று கலைத்துறை பலவற்றிலும் முன்னணி யில் நிற்கின்றனர். அவர்களுடைய அறிவின் விரிவினால் கலைப்பூங்கா வில் பூத்துக் குலுங்கும் பல புதுமைகளையும் தமிழிலே கற்றறிவதற்கு அவர்கள் படைத்த கலைச் சொற்களையே ஏற்றுக் கொள்வதா அவற் றிற்கான புதிய தமிழ்ச் சொற்களைக் காண்பதா என்ற ஆராய்ச்சியை நடாத்த வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம்.

ஒவ்வொருமொழியும் பிறமொழிகளிலிருந்து ஏராளமான சொற் களை ஏற்றுக் கொண்டால்தான் வளர்ச்சியடைய முடியும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றவர்கள் பிறமொழிகளிலுள்ள கலைச் சொற் களை அப்படியே தமிழில் எழுத்துப் பெயர்ப்புச்செய்து ஏற்றுக்கொள் வதே சிறந்த முறையாகும் என்று கருதுகின்றனர். ஆங்கிலத்தைக் கொண்டு தங்கள் கருத்தை உறுதிப்படுத்துகின்றனர். ஆனால், ஆங்கி லம் பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொண்டு வளர்ச்சியடைய வில்லை. அஃது உருவானதே பிறமொழிச் சொற்களால்தான் என்பதே உண் மையாகும். பிறமொழிகளிலிருந்து இடுகுறிச் சொற்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஆங்கில மொழிச் சொற்களில் பெரும்பாலும்

காரணச் சொற்களால் உருவாகியுள்ள தமிழ் மொழிச் சொற்களில் உள்ளன போன்று பொருளின் செறிவையோ, ஆழத்தையோ காண இயலாது.

தமிழ்மொழி மிகப்பழமையானது. அஃது இற்றைக்கு எத்தனையோ ஆயிரமாண்டுகட்கு முன்னர்த் தோன்றி முழுமை பெற்ற மொழியாகும். முழுமை பெற்ற மொழி ஆற்றல்பெற்ற மொழியே என்பதில் ஐயங்கொள்ளாத பாரதி,

"வான மளந்த தனைத்து மளந்திடும்
வன்மொழி வாழியவே"

என்று வாழ்த்தினன்.

சமீபகாலத்திலே மலர்ந்துள்ள விஞ்ஞான அறிவு தமிழகத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வேரூன்றிவிட்டது.

செஞ்ஞா யிற்றுச் செலவும்அஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமு மென்றிவை
சென்றளந் தறிந்தோர் போல வென்றும்
இனைத்தென் போரும் உளரே

என்ற புறப்பாட்டு ஒன்றே தமிழனுடைய அறிவு நுட்பத்திற்குப் போதுமான சான்றாகும். ஞாயிற்றின் இழுப்பாற்றலால் பூவுலகு அதனைச் சூழ்ந்து வருதலையும், வானம் காற்றின்றி இருத்தலையும் ஆராய்ச்சியாளர் நுண்ணிய கருவிகளைக் கொண்டு இக்காலத்தே கண்டுள்ளனர்; அவற்றைத் தமிழரின் அறிவாற்றல் என்றோ அறிந்து விட்டது.

பீலிநன் மாமயி லும்பிறி தாக்கிய
கோலநன் மாமயி லும்கொடு சென்றவன்
ஞாலமே லாம்உடை யான்அடி கைதொழுது
ஆலும்இம் மஞ்ஞை அறிந்தருள் என்றான். (சிந்தாமணி)

கதிரவ னுதய காலைக் கடன்கழித் திளவ லோடும்
அதிர்போலன் கழலி னுன்அவ் வருந்தவன் தன்னை யேத்தி
விதிதரு விமான மேவி விளங்கிழை யோடுங் கோற்றம்
முதிர்தரு துணைய ரோடு முனிமனந் தோடரப் போனுன்.

(கம்பராமாயணம்)

மேலேகண்டுள்ள இரண்டு பாடல்களும் தமிழனுக்கு விண்ணிலே பறக்கும் எண்ணமும் மிகப்பழங்காலத்தே இருந்துள்ளதைக் காட்டுகின்றன. அந்த எண்ணத்தைச் செயலில் காணுதுபோனுலும் கற்பனையிலே கண்டு களித்துள்ளான்.

இவற்றிலிருந்து, புதிய சொற்களை உருவாக்கப்புகு முன்னர் நமது பழைய ஏடுகளைப் புரட்டினுல் நமக்குத் தேவையான பலசொற்களையும் பெற்றுக்கொள்ள முடியும் என்ற உண்மை புலனுகிறது.

அணு (Atom) என்ற ஒன்றையும், அது மிகச்சிறியது, அதனைப் பிளக்கவும் முடியும்என்ற உண்மைகளையும் மேனுட்டார் பல ஆண்டுகள் ஆராய்ந்துகண்டறிந்துள்ளனர். இந்த Atom என்ற பொருளையும், அதன் தன்மைகளையும் தமிழகம் எப்பொழுதோ அறிந்துவிட்டது.

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி
குறுகத் தரித்த குறள்"

என்ற ஔவையின் குறள், நாம் கண்டுள்ள அணுதான் மேனுடுகண்ட அணு (Atom) என்பதை அழகாக உணர்த்துகின்றது. இதனை உணராது அணு (Atom) என்ற சொல்லைத் தமிழருக்குப் புதியபொருளைக் குறிக்கும் சொல்லாகக் கருதி, அச்சொல், தமிழ்இலக்கண வரம்புகளை மீறுது நிற்கின்றது என்பதனுல் அதனை "ஆட்டம்" என்று அப்படியே ஏற்றுக்கொண்டால் நாளடைவில் தமிழ் மொழியே ஆட்டங் கொள்ளத் தொடங்கிவிடும்.

எழுத்துப் பெயர்ப்பு என்பது இடுகுறிச்சொல்லாக்கத்தையே குறிக்கும். இடுகுறிச் சொற்களால் அவை உணர்த்தக்கூடிய பொருள்களைத் தான் தெரிந்து கொள்ளலாமே யொழிய அச்சொற்களைக் கொண்டு அவை குறிக்கக்கூடிய பொருள்களின் செயல்களைப் புரிந்துகொள்ள முடியாது. மேற்கோளாக அல்லி, ரோஜா என்ற இரு சொற்களைப்

பார்ப்போம். அல்லி என்பது தமிழில் பழமையாக இருந்துவருகின்ற ஒரு காரணச் சொல். அல்லின் (இரவுப்பொழுது) காதலி அல்லி: அல்லுக்குரியது அல்லி; அல்லில் மலர்வது அல்லி. இவ்வாறு பலவகையிலும் சொற்பொருத்த முள்ளது அல்லி. ஆனால், தமிழில் இடுகுறிச் சொல்லாகப் புதிதாக வந்து சேர்ந்த 'ரோஜா' என்ற சொல்லில் அத்தகைய செயல்களில் ஒன்றைக்கூட நம்மால் உணர முடியவில்லை. மேலும் எழுத்துப் பெயர்ப்பு முறையைக் கையாள்வதால் குறிப்பாக இரண்டு இன்னல்கள் ஏற்படுகின்றன.

முதலாவதாக உயிர்க்காற்று (Oxygen) நீர்க்காற்று (Hydrogen) போன்ற சொற்களை எழுத்துப்பெயர்ப்பு செய்யத் தலைப்படும்பொழுது தமிழ் மொழிக்குப் பிற எழுத்துக்களையும் கடன்வாங்க நேரிடுகிறது. இரண்டாவதாக வானொலி (Radio) தந்தி (Telephone) போன்ற சொற்களை எழுத்துப் பெயர்ப்பு செய்ய முற்படின் தமிழ்இயல் வரம்புகளை மீறவேண்டிய நிலைக்குக் கொண்டுசெல்லப் படுகிறோம்.

எழுத்துக்களைக் கடன்வாங்குவதால் தமிழுக்கே சிறப்பாகஉள்ள ஓசை நயம் கெட்டுவிடும். ஓசை நயத்திற்கும், கலைச் சொல்லாக்கத்திற்கும் என்ன சம்பந்தம் என்று நாம் கருதிவிட முடியாது. பொதுவான, கலைச் சொல்லாக்கத்தைப்பற்றிப் பேசினால் நாம் இதைப்பற்றிக் கவலைப்படத் தேவை இல்லை. ஆனால் நாம் இங்கு தமிழில் கலைச் சொல்லாக்கத்தைப்பற்றி ஆராய்கிறோம். ஆனதால் தமிழ்மொழிக்கு ஏற்ற வகையிலேயே நமது ஆராய்ச்சி நடத்தப்பட வேண்டும்.

(தொடரும்)

# மதுரைத் தமிழ்ச்சங்கப்

# பொன் விழா மலர்

**தமிழ் மக்களைத் தட்டி எழுப்பிய**
**தமிழ்ச்சங்கப் பொன்விழாவின்**
**தலைசிறந்த**
**சொற்பொழிவுகளின் தொகுப்பு**

சொற்பொழிவாற்றிய அறிஞர்களே அவைகளைக்
கட்டுரையாக எழுதியுள்ளார்கள்

**இது ஓர் அறிவுக் களஞ்சியம்! தமிழர் வரலாற்றின் தெளிவு!**
**ஒவ்வொரு தமிழ்மகனும் படிக்கவேண்டிய நூல்.**

**55 கட்டுரைகள்— 400பக்கங்கள்**

---

ஒவ்வொரு பள்ளி நூல் நிலையத்திலும் இம் மலர் இருக்க வேண்டுமென்று சென்னை கல்வி இலாகாத் தலைவர் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்கள் (R. C. No. 595. J 3/56 dated 9-12-56)

**மலர் வேண்டுவோர்**

விலை ரூ. 2-ம் தபால் செலவு ரூ. 1=50-ம் ஆக ரூ. 3=50 மணியார்டர் மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவேண்டும்

**தமிழ்ச் சங்கப் பொன்விழாக்குழு**
48, மேலமாசி வீதி, மதுரை.

இவ்விதழ் திரு. பி. டி. இராசன் அவர்களால், மதுரைத் தமிழ்ச்சங்க வீதி, தமிழ்ச் சங்க அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளியிடப்பெறுவது.